## இணை ஆணையர் (மா.வ.), அதிக வரிசெலுத்துவோர் பிரிவு, சென்னை-15 அவர்களின் செயல்முறைகள்

**முன்னிலை : திருமதி. தி.சாருஸ்ரீ, இ.ஆ.ப.,**

இடம் : புதிய ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத் துறை வளாகம் (தெற்கு டவர்), எண்.19, டி.எஸ்.எண்.2, அரசு பண்ணை கிராமம், கிண்டி தாலுக்கா, சென்னை-600 015.

**செ.மு. ந.க. எண் :** 277130/2019/அ2 **நாள் :** 22.12.2020

பொருள் : பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - வணிகவரித்துறை - இணை ஆணையர்(மா.வ), அதிக வரிசெலுத்துவோர் பிரிவு, சென்னை-15 - பணியிடை மறைந்த திரு.தி.குபேரன், பதிவுறு உதவியாளர் என்பவரின் மகள் செல்வி.கு.கோபிகா - கருணை அடிப்படையில் 24.06.2019 முற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளர் - பணி நியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறை செய்தல் - ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. இணை ஆணையர்(மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை-6 அவர்களின் செ.மு.ந.க.1540/2018/அ6, நாள் 30.05.2019.
3. இணை ஆணையர்(மா.வ), அதிக வரிசெலுத்துவோர் பிரிவு, சென்னை-8 அவர்களின் செ.மு.ந.க.377/2018/அ1, நாள் 18.06.2019.
4. கூடுதல் ஆணையர் (நிர்வாகம்)(மு.கூ.பொ.), (வணிகவரி ஆணையர் அலுவலகம்) கடித எண். ஒய்3/568683/2020, நாள் 04.09.2020.
5. அரசாணை (ப) எண்.195, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 03.11.2020.
6. இணை ஆணையர்(மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை-6 அவர்களின் கடித ந.க.1540/2018/அ6-1, நாள் 04.12.2020 மற்றும் மேலொப்பம் / கடித எண்.1540/2018 அ6-3, நாள் 04.12.2020.

******

**ஆணை :**

வணிகவரித்துறையில், சென்னை (தெற்கு) கோட்டம், இணை ஆணையர்(மா.வ), அதிக வரிசெலுத்துவோர் பிரிவு அலுவலகத்தில் பதிவுறு உதவியாளராகப் பணிபுரிந்தபோது திரு.தி.குபேரன் என்பவர் 11.03.2017 அன்று மரணமடைந்ததால் அவரது மனைவி திருமதி.கு.டெய்சிகுமாரி என்பவர் தனது மகள் செல்வி. கு.கோபிகா

என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 06.03.2018 அன்று விண்ணப்பித்ததைத் தொடர்ந்து, செல்வி. கு.கோபிகா என்பவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளதால், நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, தனியாளர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியுடையவராக அறியப்பட்டு, மேற்படி கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, பார்வை-2ல் காணும் இணை ஆணையர்(மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் செயல்முறை ஆணையின்படி வணிகவரித் துறையின் இணை ஆணையர்(மா.வ), அதிக வரிசெலுத்துவோர் பிரிவு அலுவலகத்திற்கு தனியாளர் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை-3ல் காணும் இணை ஆணையர்(மா.வ), அதிக வரிசெலுத்துவோர் பிரிவு அவர்களின் செயல்முறை ஆணையின்படி, தனியாளர் 24.06.2019 முற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராக இணை ஆணையர்(மா.வ), அதிக வரிசெலுத்துவோர் பிரிவு அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி. கு.கோபிகா என்பவர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 24.06.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய, இணை ஆணையர்(மா.வ.), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.377/2019/அ2, நாள் 20.07.2020 வாயிலாக பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு, அப்பிரேரணையின் மீது பார்வை-4ல் காணும் கூடுதல் ஆணையர்(நிர்வாகம்)(முகூபொ), வணிகவரி ஆணையர் அலுவலகம் அவர்கள் அரசுக்கு பரிந்துரைத்ததன் பேரில், கூடுதல் ஆணையரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டதில், செல்வி.கு.கோபிகா என்பவர் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்கு தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, அதாவது, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், மேலும், தனியாளரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் /சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார். மேலும் பார்வை-1ல் காணும் அரசாணையின்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளதாகவும்,

பார்வை-6ல் காணும் இணை ஆணையர் (மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் கடிதத்தின் மூலம் வரப்பெற்ற பார்வை-5ல் காணும் அரசாணை (ப) எண்.195, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 03.11.2020 வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட அரசாணையின் பத்தி 4ல் ஆணையிட்டுள்ளவாறு, வணிகவரித்துறையில், சென்னை (தெற்கு) கோட்டம், இணை ஆணையர்(மா.வ), அதிக வரிசெலுத்துவோர் பிரிவு அலுவலகத்தில் பதிவுறு உதவியாளராகப் பணிபுரிந்த போது 11.03.2017 அன்று பணியிடை மரணமடைந்த திரு.தி.குபேரன் என்பவரது மகள் செல்வி.கு.கோபிகா என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித்துறையில், இணை ஆணையர்(மா.வ), அதிக வரிசெலுத்துவோர் பிரிவு அலுவலகத்தில், தனியாளர் பணியில் சேர்ந்த நாளான 24.06.2019 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியாளர், ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ஒம்./- தி.சாருஸ்ரீ
இணை ஆணையர் (மா.வ.),
அதிக வரி செலுத்துவோர் பிரிவு,
சென்னை-8.

**பெறுநர்**

✓செல்வி. கு.கோபிகா,
இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் (மா.வ.) அலுவலகம்,
அதிக வரிசெலுத்துவோர் பிரிவு,
சென்னை - 15.

**நகல் :**

1. முதன்மைச் செயலர் / வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5. அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. இணை ஆணையர் (மா.வ.), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை - 6.
3. இவ்வலுவலக அ3 உதவியாளர்.
4. ப.உ.. கட்டு.
5. உதிரி-2

// உண்மை நகல் //

மேலாளர்
22/12/20.

22.12.2020